Liberté • Égalité • Fraternité
RÉPUBLIQUE FRANÇAISE

# பிரெஞ்சுக்குடியரசின் ஒருங்கிணைப்பு ஒப்பந்தம்



அன்புடையீர்,

நீங்கள் தற்போது பிரெஞ்சுக் குடியரசின் குடிவரவு மற்றும் ஒருங்கிணைப்பு (OFII) அலுவலகத்தில் உங்களுடைய ஒருங்கிணைப்பு ஒப்பந்தத்தில் (CIR) கையெழுத்திட உள்ளீர்கள்.

எனவே, நீங்கள் உங்கள் குடியேற்ற நாடான பிரான்ஸ் நாட்டில் நிரந்தரமாக தங்கும் விருப்பத்தை வெளிப்படுத்தி உங்கள் தனிப்பட்ட ஒருங்கிணைப்பின் பயனை உறுதி செய்து கொள்ளவும் விழைகிறீர்கள்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், நீங்கள் உரிமைகளைப் பெற முடியும். ஆனால் சட்ட திட்டங்களை மதித்து, சில கடமைகளுக்கு உங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

### ☐ *பிரெஞ்சு குடியரசின் ஒருங்கிணைப்பில் உங்கள் தனிப்பட்ட பயனுக்கான ஈடுபாடு*

இன்றைய தனி நேர்காணலுக்கான நோக்கம் என்னவென்றால், உங்களுடைய தேவைகளை மதிப்பீடு செய்வதும், உங்களுக்கான பயிற்சிகளை பரிந்துரை செய்வதும் மற்றும் உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகளுக்கேற்ப உங்களை வழிநடத்துவதுமேயாகும்.

- குடிமைக்கல்வி
  உங்களுடைய குடியேற்ற வாழ்வு இரண்டு நாட்களுக்கான ஒரு கட்டாய குடிமைக் கல்வியோடு தொடங்குகிறது.
- மொழிக்கல்வி
  உங்களுடைய மொழியறிவு ஐரோப்பிய யூனியனின் மொழி நிலைக்கான அளவுகோலில் (CECRL) A 1 நிலையை விட குறைவாக இருந்தால் நீங்கள் அந்நிலைக்கு முன்னேறும் பொருட்டு மொழிப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். இவ்வாறாக நீங்கள் உங்கள் அன்றாட வாழ்வின் தொடர்புகளுக்குத் தேவையான அளவு பிரெஞ்சு மொழியறிவை பெற்றுக் கொள்வீர்கள்.
- தகவல்கள்
  நீங்கள் உங்கள் உரிமைகள் மற்றும் உங்களுக்குக் கிடைக்கக்கூடிய பொது சேவைகள் (பள்ளிகள், மருத்துவமனைகள், சமூக பாதுகாப்பு) பற்றிய தகவல்களை பெற்று பயனடைய முடியும்

### ☐ *CIR ஒப்பந்தத்தின் மூலம் பல ஆண்டு குடியிருப்பு அனுமதி அட்டை வழங்கப்படுவதற்கான நிபந்தனைகள்*

CIR ஒப்பந்தத்தில் கை யெழுத்திடுவதன் மூலம், நீங்கள் உங்கள் குடிமைக் கல்வி மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மொழிப் பயிற்சியை விடாமுயற்சியுடனும் தீவிரமாகவும் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் நீங்கள் பிரெஞ்சு சமூகம் மற்றும் குடியரசின் அடிப்படை மதிப்புகளை மதித்து நடக்க வேண்டும்.

நீங்கள் இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்தால், பல ஆண்டு குடியிருப்பு அனுமதி உங்களுக்கு வழங்கப்படும்.

### ☐ *குடியேற்ற வாழ்வு நீடிப்பும் குடியிருப்பு அட்டை வழங்கலும்*

நீங்கள் பிரெஞ்சு மொழியை ஆழமாகக் கற்பதன் மூலம் பிரெஞ்சு குடியரசில் உங்கள் தனிப்பட்ட ஒருங்கிணைப்பைத் தொடர முடியும்

நீங்கள் குடியுரிமை அட்டை பெற விரும்பினால் பிரெஞ்சு மொழியில் CECRL -ன் A2 நிலையை எட்ட வேண்டும்

மேலும் நீங்கள் பிரெஞ்சு குடியரசின் ஆட்சிக் கோட்பாடுகளை உறுதித் தன்மையுடன் அனுசரிக்க வேண்டும்
இவ்வாறு நீங்கள் குடியரசின் ஒருங்கிணைப்பு நிபந்தனைகளை நிறைவேற்றினால் உங்களுக்கு குடியுரிமை அட்டை வழங்கப்படும்.

*அக்டோபர் 4, 1958 பிரெஞ்சு அரசியலமைப்பின் பிரிவு 1 கூறுவதாவது :*

*"பிரான்ஸ் ஒரு பிரிக்கப்பட முடியாத, மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் சமூக குடியரசாகும். அது அனைத்து பிரஜைகளுக்கும் பிறப்பு, இனம், மதம் ஆகிய வேறுபாடுகள் இல்லாமல் சட்டத்தின் முன் சமத்துவத்தை உறுதி செய்கிறது. இது அனைத்து நம்பிக்கைகளையும் மதிக்கிறது. அதன் அமைப்பு பரவலாக்கப்பட்டது.*

*தேர்தலிலும் அதன் செயல்பாடுகளிலும், தொழில் மற்றும் சமூகப் பொறுப்புகளிலும் சட்டம் ஆண் பெண் இரு பாலருக்கும் சமமாக இடமளிக்கிறது."*

## பிரெஞ்சுக்குடியரசின் ஒருங்கிணைப்பு ஒப்பந்தம்

வெளிநாட்டினர் மற்றும் தஞ்சம் கோருவோர் குடியேற்ற உள்நுழைவு மற்றும் குடியிருப்பு சட்டத்தின் L.311-9 பிரிவில் வரையறுத்துள்ளபடி பிரெஞ்சு குடியரசின் ஒருங்கிணைப்பு ஒப்பந்தம் உங்களுக்கும் பிரெஞ்சு அரசுக்கும் இடையிலானது. நிர்வாகத்துறையின் பிரதிநிதித்துவம் கொண்டது. இருதரப்பின் பரஸ்பர கடமையை அடிப்படையாகக் கொண்டது.

### *I. அரசின் கடமைகள்*

அரசு உங்கள் ஒருங்கிணைப்பின் பொருட்டு தஞ்சத்திற்கான ஏற்பாடு செய்கிறது. அது கீழ்க்காணும் சேவைகளைக் கொண்டது:

- OFII-ன் மதிப்பீட்டாளர் ஒருவருடன் உங்களுக்கு ஒரு தனி நேர்காணல் ஏற்பாடு செய்யப்படும். அவர் உங்களுடைய தேவைகளை மதிப்பீடு செய்து, உங்களுக்கான பயிற்சிகளை பரிந்துரை செய்து உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகளுக்கேற்ப உங்களை வழிநடத்துவதுவார் ;
- இரு தொகுதிகளைக்கொண்ட குடிமைப்பயிற்சி:
  - பிரெஞ்சு குடியரசின் கோட்பாடுகளும் மதிப்புகளும்;
  - பிரான்சில் வாழ்வதும் வேலை தேடிக்கொள்வதும்;
- OFII உங்கள் பிரெஞ்சு மொழியின் நிலையை அறிந்து கொள்ள நடத்தும் மொழி நிலை சோதனை
- அவசியமானால் மொழிப்பயிற்சி வகுப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்படும். அதற்கான தேவையும் கால அளவும் CECRL-ன் A1 நிலைக்கேற்ப வரையறுக்கப்படும்.

### *II. உங்கள் கடமைகள்*

நீங்கள் ஈடுபட வேண்டியவை:

- பிரெஞ்சு சமூகம் மற்றும் குடியரசின் அடிப்படை மதிப்புகளை மதித்து நடக்க வேண்டும்;
- குடிமைப்பயிற்சியின் இரு தொகுதிகளையும் மற்றும் மொழிப் பயிற்சியையும் தீவிரமாகவும் உறுதித் தன்மையுடனும் மேற்கொள்ள வேண்டும்;
- OFII-யுடனான நேர்காணலின் பரிந்துரைகளை ஏற்று செயல் படுத்த வேண்டும்;
- சூழ்நிலையில் ஏதேனும் மாற்றம் இருப்பின் OFII-க்கு கடிதம் மூலமாக தெரியப்படுத்த வேண்டும்.

### *III. ஒப்பந்த காலம்*

CIR ஒப்பந்த காலம் ஒரு வருடம் கொண்டது. இது விதிவிலக்காக நிர்வாக அலுவலர் மூலம், நியாயமான காரணங்களுக்காக, கூடுதலாக ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கப்பட முடியும்.
நீங்கள் தீவிரமும் உறுதித்தன்மையும் அனுசரிக்கும் நிபந்தனைகளை மீறி நடந்தாலோ அல்லது பிரெஞ்சு சமூகம் மற்றும் குடியரசின் அடிப்படை மதிப்புகளை மதித்து நடக்கத் தவறினாலோ OFII --ன் ஆலோசனைப்படி நிர்வாக அலுவலர் மூலம் உங்கள் CIR ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியும்.

## தனிப்பட்ட நேர்காணல்

இன்றைய நேர்காணலின்படி கீழ்க்காணும் பயிற்சிகள் உங்களுக்கு பரிந்துரைக்கப்படுகின்றன:

- குடிமைப்பயிற்சி "பிரெஞ்சு குடியரசின் கோட்பாடுகள் மற்றும் மதிப்புகள்"
  ☐ அவசியமானது
- *குடிமைப்பயிற்சி " பிரான்சில் வாழ்வதும் வேலை தேடிக்கொள்வதும்"*
  ☐ *அவசியமானது*
- *மொழி பயிற்சி*

☐ *A1 நிலையை எட்டியவர் (மொழிப்பயிற்சி விதிவிலக்கு)*

☐ A1 நிலையை எட்டாதவர் (மொழிபயிற்சிக்கான கால அளவு பரிந்துரை)

மேலும் கீழ்க்காணும் சேவைகளுக்காக நீங்கள் வழிநடத்தப் படுகிறீர்கள்:

**பிரெஞ்சுக்குடியரசின் ஒருங்கிணைப்பு ஒப்பந்த எண்:**

ஒப்பந்த நாள்:

ஒப்பந்தம் செய்து கொண்டவர் திரு/திருமதி

(சிறுவர்க்கு சட்ட பாதுகாவலர்)

AGDREF எண்:

கையொப்பம்:

நிர்வாக அலுவலர்:

ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டிருப்பின் (காலம், முடியும் தேதி, காரணம்) :

CIR ஒப்பந்தமே பிரான்சில் உங்கள் ஒருங்கிணைப்புக்கான முதல் படியாகும். அதன்படி உரிமைகளையும் கடமைகளையும் மதித்து நடந்தால் இந்த குடியேற்ற நாட்டில் வெற்றிகரமான ஒருங்கிணைப்பு உத்தரவாதம்.

இந்த ஒப்பந்தம் கணினிகள், கோப்புகள், சுதந்திரம் பற்றிய ஜனவரி 6, 1978 ஆம் ஆண்டின் சட்ட எண் 78-17 க்கு பொருந்தும் . குடிவரவு மற்றும் ஒருங்கிணைப்பு பிரஞ்சு அலுவலகம், உங்களைப் பற்றிய சரியான தரவுகளை நீங்கள் பெறவோ திருத்தவோ உறுதியளிக்கிறது.